[1977 ஆகஸ்ட் 8

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : கனம் உறுப்பினர் அவர்கள் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஆட்சிக்கத்தில் மேற்படி திட்டம் நிறுத்தப்பட்டது என்று சொன்னார்கள். அதற்கு ஆதாரம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

கோழிப்போர்விளைக்குப் பாசன வசதி.

* 34 வினா—திரு. எ. சுவாமிதாஸ் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், திருவிதாங்கோடு சானலின் கிளை கால்வாயான கோடியூர் கால்வாயில் இருந்து கோழிப்போர் விளைக்கு அருகாமையில் ஒரு புதிய வாய்க்கால் வெட்டி சுமார் நாற்பது எக்கரா நிலத்திற்கு பாசன வசதி செய்து கொடுப் பதற்காக நில ஆர்ஜிதம் செய்யவும் கால்வாய் வெட்டவும் திட்டமிட்டு மதிப்பீடு தயார் செய்து, அரசு ஒப்புதலுக்காக பல வருடங்களுக்கு முன்னரே அனுப்பப்பட்டதே அதற்கு அரசு நல்கிவிட்டதா ? இல்லையெனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நிதி பற்றாக் குறையின் காரணமாக திருவிதாங்கோடு கால்வாயின் 29 ஆம் எண் மதகின்கீழ் உள்ள நிலங்களுக்கு பாசனத்திற்கான வாய்க்கால்களை அமைக்கும் திட்டம் இதுவரை எடுத்துக்கொள்ளப் படவில்லை.

மக்கள் தொடர்பு அதிகாரிகள்.

* 28. வினா—திரு. என். கிட்டப்பா :

திரு. என். இராமச்சந்திரன் :

திரு. துரை முருகன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977 ஆகஸ்ட் 8]

1976-க்குப் பின்னால் பொதுமக்கள் தொடர்பு அதிகாரிகள் எத்தனை பேர் அரசு அலுவலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அவைத் தலைவர் இத்துறையில் அரசு அலுவலிலிருந்து நீக்கப்பட்டவர்களின் விவரம் கீழ் வருமாறு :—

மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்கள்—15.

திரு. என். கிட்டப்பா: நீக்கப்பட்டவர்கள் யாராவது மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? அப்படிச் சேர்க்கப்பட்டிருந்தால் அவர்களுக்குத் தனியாக பதவி உயர்வு ஏதாவது கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படி நீக்கப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டவர்களைத் தவிர பாக்கியுள்ளவர்களையும் அதேமாதிரி அவர்கள் பணியில் அமர்த்த அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: நீக்கப்பட்டவர்களில் ஒருவர் அல்லது இருவர் வேறு துறைகளிலிருந்து சேர்க்கப் பட்டிருக்கிறார்கள், குறைந்த ஊதியத்தில் சேர்க்கப்பட்டிருக் கிறார்கள். மற்றவர்கள் வேண்டுகோளும் அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன்: மக்கள் தொடர்பு அதிகாரிகள் 15 பேர்கள் நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள், மக்கள் தொடர்பு அதிகாரிகள் அல்லாமல் வேறு பணியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்களா? அவர்களுக்கு வேலைகள் கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மக்கள் தொடர்பு அதிகாரிகளைப்பற்றித்தான் கேள்வி இங்கே வைக்கப் பட்டிருக்கிறது. அதற்கு விடை அளிக்கப்பட்டிருக்கிறது. வேறு அலுவலர்கள் பற்றி விவரங்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. என். கிட்டப்பா: 15 பேர்களை நீக்கியதற்குப் பின்னால் அவர்களுக்குப் பதிலாக புதிதாக யாராவது இந்த இடங்களில் வேலையில் அமர்த்தப்பட்டார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: புதிதாக அந்தப் பணிக்கு யாரும் அமர்த்தப்படவில்லை. அந்தத் துறையில் வேறுவிதமான பொறுப்புகள், பணிகளை மேற்கொள்வதற்கு

டெப்டி கலெக்டர்கள், அந்தத் துறையிலிருந்து மாவட்ட விசேஷ உதவியாளர்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கோ. இளங்கோவன்: வேறு பணியாளர்கள் என்று நான் குறிப்பிட்டது மக்கள் தொடர்பு அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் காடரில் அல்லாத அஸிஸ்டென்ட்ஸ் போன்றிருப்பவர்களைப் பற்றித்தான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 17 செய்தி உதவியாளரும் 27 விளம்பர உதவியாளரும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய வாக்காளர் பட்டியல்.

*35 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஊராட்சி ஒன்றிய வாக்காளர் பட்டியல் திருத்தி அமைக்கப்பட அரசு ஆணை வழங்கியுள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஆம்.

திரு. என். கிட்டப்பா: ஊராட்சி ஒன்றிய வாக்காளர் பட்டியல் திருத்தப்படுவதுபோலவே நகராட்சிகள் வாக்காளர் பட்டியலும் திருத்தப்படுவதாகத் தெரிகிறது. அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில்கூட ஒரு முறை வாக்காளர் பட்டியல் திருத்தப்பட்டிருக்கிறது. சட்டமன்றத் தேர்தலின்போது திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலை இந்த ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களிலும் பயன்படுத்த அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: சட்டமன்றத் தேர்தல் போது திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலையொட்டியே ஊராட்சி மன்ற வாக்காளர் பட்டியலும் திருத்தப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா: வாக்காளர் பட்டியல் திருத்தப்படுகிறதே தவிர புது வாக்காளர் பட்டியல் தயாரித்தால்தான் திருத்தப்படுவதில் உள்ள பல்வேறு பிழைகள் மாற்றப்பட்டு உண்மையான வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க முடியும், அப்படித் தயாரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?